## செய்தி மக்கள் தொடர்புத் துறையில்

# அரசின் திட்டங்கள் அறிந்திட புதிய ‘கட்செவி’ சேனல்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூன் 11 –

தமிழ்நாடு அரசின் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்திட செய்தி மக்கள் தொடர்புத் துறையில் புதிய கட்செவி (Whatsapp) சேனல் தொடங்கப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு அரசு செய்தி வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு பல்வேறு முனைப்பான திட்டங்களைத் தீட்டி சிறப்பான முறையில் நிறைவேற்றி வருகிறது.

பொதுமக்கள் அனைத்து அரசுத் திட்டங்கள் குறித்து முழுமையாக அறிந்து கொண்டு பயனடையத் துணைபுரியும் வகையில் தமிழ்நாடு அரசு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை சார்பில் Facebook, Instagram, Twitter, மற்றும் Youtube போன்றவற்றில் பக்கங்கள் தொடங்கி சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.




மேலும் இதன் அடுத்த கட்ட முன்னெடுப்பாக அதிகாரபூர்வ கட்செவி (Whatsapp) சேனல் ”TN DIPR, Govt. of Tamil Nadu” என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ளது. அதில் பொது மக்கள் இணைந்து அரசின் திட்டங்கள் மற்றும் செய்திகளை தெரிந்து கொள்ள கீழ்க்கண்ட துலங்கல் குறியீடு (QR Code) ஸ்கேன் செய்யவும்.

மேலும் தமிழ்நாடு அரசின் செய்திமக்கள் தொடர்புத் துறையின் மேற்கண்ட சமூக வலைதள பக்கங்களை காண சிறிய அளவில் கொடுக்கப்பட்டுள்ள துலங்கல் குறியீட்டை ஸ்கேன் செய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரதமர் மோடி தலைமையிலான

# ஒன்றிய அமைச்சரவையில் இலாகாக்கள் ஒதுக்கீடு!

டெல்லி, ஜூன் 11-

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அமைச்சரவையில் இலாகாக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கின்றன. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனி மெஜாரிட்டியை பெறாவிட்டாலும், கூட்டணிக் கட்சிகளின் தயவில் ஒன்யத்தில் பா.ஜ.க. ஆட்சியமைத்துள்ளது. இதனிடையே, நேற்று முன்தினம் டெல்லியில் நடந்த விழாவில் நரேந்திர மோடி 3-வது முறையாக பிரதமராக பதவியேற்றார். அவரது தலைமையில் 71 மத்திய அமைச்சர்களும் பதவியேற்றுக் கொண்டனர். இந்நிலையில், புதிய அமைச்சரவையின் முதல் கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு பிறகு யாருக்கு எந்த இலாகா என்ற தகவல் வெளியிடப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

ராஜ்நாத் சிங் - பாதுகாப்பு, அமித்ஷா - உள்துறை, ஜே.பி. நட்டா - சுகாதாரம், ரசாயனங்கள், சிவ்ராஜ் சிங் சவுஹான் – வேளாண், ஊரக வளர்ச்சி, மனோகர் லால் கட்டார் – மின்சாரம், வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, நிர்மலா சீதாராமன் - நிதி, ஜெய்ஷங்கர் - வெளியுறவு, அஷ்வினி வைஷ்ணவ் – ரயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு, எலக்ட்ரானிக்ஸ் மற்றும் ஐடி, மன்சுக் மாண்ட்வியா – தொழிலாளர் நலன், இளைஞர் நலன், விளையாட்டு, ஹர்தீப் சிங் புரி – பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, ஜித்தன் ராம் மஞ்சி – சிறு குறு நடுத்தர தொழில்கள், தர்மேந்திர பிரதான் - கல்வி, குமாரசாமி - இரும்பு, கனரக தொழில்கள், ராம் மோகன் ராயுடு - விமான போக்குவரத்து, பியூஷ் கோயல் - வணிகம் மற்றும் தொழில்துறை, ராஜீவ் ரஞ்சன் சிங் - பஞ்சாயத்து ராஜ், மீன்வளம், கால்நடை, பால்வளம், சர்பானந்த சோனோவால் – கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், நீர்வழிகள், வீரேந்திர குமார் – சமூக நீதி, அன்னபூர்ண தேவி - மகளிர், குழந்தைகள் மேம்பாடு, கிரண் ரிஜிஜு - நாடாளுமன்ற விவகாரங்கள், சிறுபான்மையினர் நலன், சி.ஆர்.பாட்டீல் - ஜல் சக்தி, ப்ரகலாத் ஜோஷி - நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொதுவிநியோகம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, கிரிராஜ் சிங் - ஜவுளி, ஜுவல் ஓரம் - பழங்குடியினர் நல விவகாரம், ஜோதிர்த்தியா சிந்தியா – கம்யூனிகேஷன், வடகிழக்கு நலன், பூபேந்தர் யாதவ் - சுற்றுச்சூழல், வனம், கஜேந்திர சிங் ஷெகாவத் – கலாச்சாரம் மற்றும் சுற்றுலா, கிஷன் ரெட்டி - நிலக்கரி மற்றும் சுரங்கங்கள், சிராஜ் பஸ்வான் – உணவு பதப்படுத்தும் தொழில்கள்.

**தனி பொறுப்புடன் கூடிய இணை அமைச்சர் பதவிகள் & இலாகாக்கள்**

ராவ் இந்தர்ஜித் சிங்- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க துறை, திட்டமிடல் துறை, ஜிதேந்திர சிங்- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை, புவி அறிவியல் துறை, அர்ஜுன் ராம் மேக்வால்- சட்டம் மற்றும் நீதி துறை, பிரதாப்ராவ் கணபத்ராவ் ஜாதவ்- ஆயுஷ் துறை, ஜெயந்த் சவுத்ரி- திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறை

**இணை அமைச்சர்கள் & இலாகாக்கள்**

ஜிதின் பிரசாத் - வர்த்தகம் மற்றும் தொழில்துறை, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை (இணை அமைச்சர்), ஸ்ரீபாத் நாயக்- மின் துறை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (இணை அமைச்சர்), பங்கஜ் சவுத்ரி- நிதித்துறை (இணை அமைச்சர்), கிரிஷன் பால் குர்ஜார்- கூட்டுறவுத்துறை (இணை அமைச்சர்), ராம்தாஸ் அத்வாலே- சமூக நிதி மற்றும் அதிகாரமளித்தல் (இணை அமைச்சர்), ராம் நாத் தாக்கூர்- வேளாண் துறை (இணை அமைச்சர்), நித்யானந்த் ராய்- உள் துறை (இணை அமைச்சர்), அனுப்ரியா பட்டேல்- சுகாதார துறை, கெமிக்கல் துறை (இணை அமைச்சர்), வி சோமண்ணா- ஜல்சக்தி, ரயில்வே துறை (இணை அமைச்சர்), டாக்டர் சந்திர சேகர் பெம்மாசானி- ஊரக வளர்ச்சி, தகவல் தொடர்பு துறை (இணை அமைச்சர்), எஸ்பி சிங் பாகேல்- மீன்பிடி, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள துறை, பஞ்சாயத்து ராஜ் துறை (இணை அமைச்சர்), ஷோபா கரந்த்லாஜே- சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்துறை (இணை அமைச்சர்), கீர்த்தி வர்தன் சிங்- சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் துறை, வெளியுறவுத் துறை (இணை அமைச்சர்), பிஎல் வர்மா- நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக துறை, சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் (இணை அமைச்சர்), சாந்தனு தாக்கூர்- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் போக்குவரத்து (இணை அமைச்சர்), சுரேஷ் கோபி- பெட்ரோலியத்துறை, சுற்றுலாத் துறை (இணை அமைச்சர்), எல் முருகன்- தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை, நாடாளுமன்ற விவகாரத் துறை (இணை அமைச்சர்), அஜய் தம்தா - சாலை போக்குவரத்துத் துறை (இணை அமைச்சர்), பாண்டி சஞ்சய் குமார்- உள்துறை (இணை அமைச்சர்), கமலேஷ் பாஸ்வான்- ஊரக வளர்ச்சித் துறை (இணை அமைச்சர்), பகீரத் சவுத்ரி- வேளாண் துறை (இணை அமைச்சர்), சதீஷ் சந்திர துபே- நிலக்கரி துறை, சுரங்கத்துறை (இணை அமைச்சர்), சஞ்சய் சேத்- பாதுகாப்பு துறை (இணை அமைச்சர்), ரவ்னீத் சிங் பிட்டு- உணவு பதப்படுத்துதல், ரயில்வே துறை (இணை அமைச்சர்), துர்கா தாஸ் உய்கே - பழங்குடியினர் விவகாரத் துறை (இணை அமைச்சர்), ரக்ஷா காட்சே- இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை, சுகந்தா மஜூம்தார்- கல்வித் துறை, வடகிழக்கு விவகாரங்கள் துறை, சாவித்ரி தாக்கூர்- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை, டோகன் சாஹு- நகர்ப்புற மேம்பாட்டு, வீட்டு வசதித்துறை (இணை அமைச்சர்), ராஜ்பூஷன் சவுத்ரி- ஜல்சக்தி துறை (இணை அமைச்சர்), பூபதிராஜு ஸ்ரீனிவாச வர்மா- கனரக தொழில்துறை, இரும்பு துறை (இணை அமைச்சர்), ஹர்ஷ் மல்ஹோத்ரா- சாலை போக்குவரத்து துறை, கார்பரேட் விவகாரங்கள் துறை (இணை அமைச்சர்), நிமுபென் ஜெயந்திபாய் பாம்பானியா- நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக துறை (இணை அமைச்சர்), முரளிதர் மோஹோல்- கூட்டுறவுத்துறை, சிவில் விமான போக்குவரத்துத் துறை (இணை அமைச்சர்), ஜார்ஜ் குரியன்- சிறுபான்மையினர் விவகாரத் துறை, மீன்பிடி, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை (இணை அமைச்சர்), பபித்ரா மார் கெரிட்டா- வெளியுறவுத்துறை, ஜவளித்துறை (இணை அமைச்சர்)


திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றியை தெரிவித்தார். உடன் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மாதரம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# தி.மு.க. நாடாளுமன்றக் குழு நிர்வாகிகள்



## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



**மக்களவை – மாநிலங்களவை**
**இரண்டு அவைகளுக்கும் சேர்த்து**
கழக நாடாளுமன்றத்தின் குழுத் தலைவராக
துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி, எம்.பி**
அவர்களும்;



**மக்களவைக் குழுத் தலைவராக**
கழகப் பொருளாளர் **டி.ஆர்.பாலு, எம்.பி**
அவர்களும்;



**மக்களவைக் குழுத் துணைத் தலைவராக**
கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
**தயாநிதி மாறன், எம்.பி**
அவர்களும்;



**மக்களவை கொறடாவாக**
துணைப் பொதுச்செயலாளர் **ஆ.இராசா, எம்.பி.**
அவர்களும்;



**மாநிலங்களவைக் குழுத் தலைவராக**
கொள்கை பரப்புச் செயலாளர் **திருச்சி சிவா, எம்.பி.,**
அவர்களும்



**மாநிலங்களவைக் குழுத் துணைத் தலைவராக**
தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் **மு.சண்முகம், எம்.பி.,**
அவர்களும்



**மாநிலங்களவை கொறடாவாக**
தலைமைக் கழக சட்ட தலைமை ஆலோசகர்
வழக்கறிஞர் **பி.வில்சன், எம்.பி.,**
அவர்களும்



**இரு அவைகளின் பொருளாளராக**
கொள்கை பரப்பு செயலாளர் **எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி**
அவர்களும்
நியமிக்கப்படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை–18.
நாள்:10.06.2024.

**மு.க.ஸ்டாலின்,**
**தலைவர்,**
**தி.மு.க.**


திருச்சி கிழக்கு மாநகர துணைச் செயலாளர் பொன். செல்லையா மகனும் காட்டூர் பகுதி இளைஞர் அணி அமைப்பாளருமான செ.தயாநிதி – எஸ்.ஸ்வேதா இணையரின் திருமணத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து இல்லற வாழ்வில் இணைய உள்ள சகோதரர் செ.தயாநிதி – எஸ்.ஸ்வேதா தம்பதியினர் கழகமும் கலைஞரும் போல, தலைவரும் உழைப்பும் போல் என்றும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார். உடன் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.